# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 30 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல் | | | 02 | 357இ131 |
| குறைத்துக் கூறல் | 02 | 26இ455இ427 | | |

(ஆ) நன்கொடையாக பெறப்பட்ட 7 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்காமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி குறைத்துக் கணக்குகளில் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
---------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை
------------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 25இ143இ608 பெறுமதியுடைய 02 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்
------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி<br>அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ரூபா 1இ931இ676 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரின் ஆணைச்சீட்டு அனுப்பப் பட்டிருக்கவில்லை. |
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம்<br>அத்தியாயம் ஏ பிரிவு 132 | பிரதேசசபை களியாட்ட விடயங்களுக்காக ஆண்டொன்றிற்கு ஆயிரம் ரூபாவிற்கு அதிகமான செலவினத்தை மேற்கொள்ளும் போது அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனபதற்கு முரணாக ரூபா 26,501 அங்கீகாரமின்றி சபை நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 234 | 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 3இ710 பெறுமதியான மாற்றப்படாத காசோலைகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| நிதி ஒழுங்குவிதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 268இ129 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 215இ932 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாடு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 27இ675 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 19இ260இ771 அதிகரித்துக் காணப்பட்டது. பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 8இ958இ962 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i.இறைகளும் வரிகளும் | 644 | 123 | 1,932 |
| ii.குத்தகை வாடகைகள் | 10,950 | 11,836 | - |
| iii.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 2,055 | 1,792 | - |
| iv.வேறு வருமானங்கள் | 42,941 | 62,099 | 52,654 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

(அ) ரூபா 2,210,428 பெறுமதியான அரசிறைக்கடனாளிகள் நிலுவையை அறவிடுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ )உரிமக் கட்டண அறவீடுகளுக்கு வருட ஆரம்பத்திலேயே செலுத்த தகுதியுடையவர்களது விபரங்கள் உரிமக் கட்டண பதிவேட்டில் பதிவு செய்யப்படாது அறவீடு செய்யும் போது மட்டுமே வருமானமாக கணக்கிடப்படுவதனால் மீளாய்வாண்டில் அறவிடப்படாத உரிமக் கட்டண அறவீடுகள் கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமையால் உரிமக் கட்டண வருமானத்தில் வீழ்சியைக் காட்டுகின்றது.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் பருத்தித்துறை நீதவான் நீதமன்றிலிருந்து 2011 – 2013 ஆண்டு வரை பெறவேண்டிய ரூபா 8,602,327 பெறுமதியான நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆயினும் அறிக்கையிடும் திகதியில் ரூபா 2,426,125 அறவீடு செய்யப்பட்டுள்ளது.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

---

2010, 2011, 2012 மற்றும் 2013ம் ஆண்டுக்கான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கட்டணங்கள் முறையே ரூபா 88இ623இ794 ஆண்டு தோறும் வருமானமாக கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

2.4.1 அறவிடப்படாதுள்ள பதவியினர் கடன் நிலுவை

---

2012ம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய இடர்கடன் நிலுவை ரூபா 20இ500 மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4.2 பயன்படுத்தப்படாத வாகனங்கள்

---

அ. சபையில் 4 எண்ணிக்கையான வாகனங்கள் பயன்பாடின்றி பழுதடைந்த நிலையில் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகிறது.

ஆ. மானி வாசிப்பு பழுதடைந்த நிலையிலுள்ள உழவு இயந்திரம் (எவயனெசநன) வாகனம் மீளாய்வாண்டில் ரூபா 45,339 பெறுமதியான டீசல் பயன்படுத்தப்பட்டிருப்பது வாகனத்தின் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டு செலவினை கணக்காய்வில் கணப்பிட முடியாதுள்ளது.

2.4.3 வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கையிலுள்ள குறைபாடுகள்

---

2013ம் ஆண்டுக்கான பிரதான அலுவலக இருப்புக் கணிப்பீட்டுசபை அறிக்கையினை இருப்புப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்தபோது 08 எண்ணிக்கையான பொருட்கள் மேலதிகவும் 05 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றன.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

### 2.5.1 நிறைவேற்றப்படாத செயற்திட்டம்

--------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டில் வரவு செலவுத்திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 6 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. மூலதன வேலைகளுக்கு சபைநிதியில் 8 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதேயன்றி வேலைத்திட்டவாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காமை பாரிய குறைபாடாக காணப்படுகின்றது.

### 2.5.2 அங்கீகாரமற்ற வேலைத்திட்டம்

----------------------------------------------

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத நெல்லியடி பொது சந்தை மற்றும் பிரதான அலுவலக வேலை ரூபா 845,258 பெறுமதியான வேலைத்திட்டங்கள் சபைநிதியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 2.6 செயற்பாடுகளின் செயற்திறனின்மை

-----------------------------------------------------

2007 – 2009 ம் ஆண்டு காலப்படுதிகளில் உள்;ராட்சி ஆணையாளரினால் சனசமூக நிலைய அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 10,300 அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 திண்மக் கழிவு முகாமைத்துவம்

--------------------------------------------------

சபையின் எல்லையினுள் பெறப்படும் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படுவதேயன்றி பிரதேச அபிவிருத்தியை நோக்கி சேதன பசளை உற்பத்தி மற்றும் மீள் சுழற்சி போன்ற வழிகளை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

# 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ. வரவு செலவுத் திட்டம்

ஆ.வருமான சேகரிப்பு

இ. வாகன பயன்பாடு